பள்ளிகளில் பெற்று வந்த சம்பளத்தோடு மாதம் ரூபாய் 40 சிறப்பூதியம் பெற்று வருகின்றனர். தொழிற்கல்வி ஆசிரியர்களுள் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் இதர முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அரசு ஆணை 1091, கல்வி, நாள் 15—6—1978-ன்படி அளிக்கப்பட்டு வரும் சம்பள விகிதத்தைப் பெற வாய்ப்பில்லை.

*104. வினா—திரு. பா. ரா. தாமஸ் (திரு. செ. முத்துசாமி சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் 8—2—1982-ல் மாவட்டத் தலைநகர்களில் ஊர்வலம் நடத்தி, முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட ஆட்சியாளர் ஆகியோர் மூலம் தங்கள் சங்கக் கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பியுள்ளார்கள் என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவற்றின்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) அவர்கள் அளித்த 8 கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து தக்க மேல்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, வாழ்க்கைத் தொழில் முறைக் கல்வி தொடர்பான பாடத்தைப் பயிற்றுவிக்கிற முதுநிலைப் பள்ளியாசிரியர்களுக்கு முதுநிலை ஆசிரியர்களுக்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும். அலைடு சப்ஜெக்டுகள் வொக்கேஷனல் கோர்ஸில் கற்பிக்கப்படும்போது, போஸ்ட்கிராஜுஏவேட் ஆசிரியர்களுக்குச் சமமான ஊதியத்தைக் கொடுக்க வேண்டுமென்று ஆணை உருவாக்கலாம் அல்லவா, இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்லதொரு ஆணையை வழங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு முதுகலைப் பட்டம் தேவையென்று அரசு சொல்லவில்லை. ஆகவே இந்தப் பிரச்சினை எழவில்லை.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, இந்தக் கல்வியில், உதாரணமாக விவசாயம் என்று எடுத்துக்கொண்டால், அதிலே நேச்சுரல் சயின்ஸ் ஆறு பாடவேளைகள் போதிக்கவேண்டியிருக்கிறது. அப்படி போதிக்கப்படும் போது, அவர்கள் முதுகலைப் பட்டதாரிகளாக இருந்தாகவேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்காவது இந்த முதுநிலை ஊதியம் வழங்க முன்வரவேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அத்தகைய பாடங்களைச் சொல்லித் தருகிற ஆசிரியர்களின் நிலைகுறித்து, இந்தப் படிப்புதான் இருக்க வேண்டுமென்று இருந்தால், அப்போது இந்தச் சம்பள விகிதத்தைக் கொடுக்கலாம். அப்படிப்பட்ட தகுதி இருக்க வேண்டும் என்று நாம் முடிவு செய்ய வேண்டும். அப்படி முடிவு செய்யாமல், இப்படிப்பட்ட சம்பளம் தருவதற்கில்லை. ஆனால் அவர்களைப் பொறுத்தவரையில், அரசு ஒரு முக்கியமான யோசனையைச் செய்துகொண்டிருக்கிறது. சிறப்பூதியம் பெற 24 பாடவேளைகள் இருக்கவேண்டுமென்று இப்போது விதியிருக்கிறது. அதற்குப் பதிலாக பள்ளிக் கல்வி இயக்குநர் இந்தச் சிறப்பூதிய பாடவேளை நிபந்தனையை நீக்கியதோடு, சிறப்பூதியம் பெறமுடியாது இருந்த தேதியிலிருந்து சிறப்பூதியம் பெறுவதற்கேற்ற வகையில் அரசு ஆணை வெளியிட இருக்கிறது. இது ஒரு முக்கியமான ஒன்றாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பா. ரா. தாமஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஏனைய பிரிவு ஆசிரியர்களுக்கு ரூ. 25 லிருந்து ரூ. 40 ஆக உயர்த்திய அந்த நாளிலிருந்து அவர்களுக்கும் அளிக்குமாறு அரசு ஆணை வெளியிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அதைத் தான் இப்போது சொன்னேன். ஊதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட பாடவேளை நிபந்தனையை நீக்கியதோடு புதிய பிரிவு ஆசிரியர்கள் பெற வழி இல்லாததால், அப்படிப் பெற முடியாத நாளிலிருந்து அவர்கள் சிறப்பூதியம் பெற ஆணை இடப்படவிருக்கிறது.

பகுதிநேர தொழிற் பாட ஆசிரியர் ஊதியம்.

*105. வினா—திரு. க. அருணாசலம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—